3:15

உ

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

திரிசிராமலை யாதவர்புரம் ஸ்ரீ துர்க்காம்பிகை

இருபா மாலை.

இஃது

ஷியூர் யாதவர்புரம் மகா-ா-ா-ஸ்ரீ

ம. வடிவேல்சாமிபிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு,

யாதவர்புரம் ரு. ரெங்கசாமிக்கோனார் விருப்பத்தின்படி

ந. இராமாமிர்தக்கோனார் பொருளுதவியால்

திருச்சி:-"விவேகபானு அச்சாபீசில்"
திப்பிக்கப்பட்டது.

1915.

Q25: 38·21192
N15
121451



உ

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

திரிசிராமலை யாதவர்புரம்

ஸ்ரீ துர்க்காம்பிகை

பதிகம்.

இஃது

ஷையூர் யாதவர்புரம் மகா-ா-ா-ஸ்ரீ

மதுரநாயகம்பிள்ளை குமாரர் மகா-ா-ா-ஸ்ரீ

வடிவேல்சாமிபிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு,

திருச்சி:-"விவேகபானு அச்சாபீசில்"

பதிப்பிக்கப்பட்டது.

௩

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

திரிசிராமலை பெரியபஜார் வாணக்கடை மகா-ா-ா-ஸ்ரீ
தி. ம. வெங்கடாஜலம்பிள்ளையவர்கள் குமார்
மகாவித்வான் மகா-ா-ா-ஸ்ரீ

துரைசாமிநாவலரவர்கள் இயற்றிய

சாற்றுக்கவி.

அடங்கொண்டெழும்பி வெம்முகமும்பொழி யஸ்டகெஜம்
படங்கண்டேந்திய பாந்தளுந் திகிரியும் பார்சுமப்பப்[போன்
திடம்படுக மடமாதாரனி ருதாரந்தாங்கல் செய்கையைப்
றுடம்படுமுன்னூல் நிரோட்டக யமக வந்தாதி தூய்கவி
[ஞர் உளஞ் சுமந்தே.

விருத்தம்.

பாவாய் கமலிபதாம்புயந்தழுவிய பால்யசிங்கன் பகரும்வாக்
கோ, தேவாமுர்தமென செப்பலுற்றான் துர்க்கை சீர்
பதிகம்பால், கோவாவேறுளவென் றுரையா திரிசைகுரி
சில் யாதவர் குலம் விளங்கப், போவார் வருவார் அனைவர்
புகழ் புண்யன் வடிவேல்சாமி புலவ னாமே.

பின்னூ விருபாமாலை தொகுத்துப் பிரசுரஞ் செய்தான்
றமிழிற் பிரீதியோடு, நன்னூலென்றார்பொ-திகைநாவலருந்
தலையசைக்க நடித்தா னீசன், இன்னூலுக் கென்னூது
மிசையாதென்றே வாணி யெழுந்திருந்து, முன்னூலுங்
கங்கணமும் முடிபுனைந்து வடிவே லுச்சிமுகர்ந்தாள்மாதோ.

காப்பு வெண்பா.

பொற்கடகப் பூணணியும் புங்கவிச டாட்சரியாந்
துர்க்கைபதத் தில்மாலை சூட்டவே - யெற்குதுணை
வீருனை யையுரித்த மெய்யனையன் பெற்றெடுத்த
காரானை மாமுகத்தன் கால்.

நூல்.

வெண்பா.

பஞ்சவினைக் கும்முதலாம் பாவையர்கண் மேலாசை
கொஞ்சமே னும் நினைக்கக் கூடாதே—நெஞ்சமே
என்னபய னுண்ட திலை யேதுமிலை யாதலினம்
அன்னைதுர்க்கை காற்காளா வாய் (1)

கலித்துறை.

வாயிருந் தும்நினைப் பாடாம லேயான் மயங்கிமணப் [யோ
பேயருஞ் செய்கைக்குள் ளாயிருந் தேன்என்ன பேதைமை
நீயிருந் தும்எனைச் சீர்திருத் தாதந்த நேர்மை யெல்லாம்
தாயிருந் துஞ்சேய் தளர்ந்திட்ட தென்னுமோர் சங்கதியே.

கதியாரில் லைநெஞ்சே காணரிய மேதிச்
சதியாளனைச்செற்ற தாயைத்—துதிபாவ
வர்க்கமெல்லாஞ் சாக மதிபெருகச் செல்வம்வா
துர்க்கையம்மன் என்றொருக்காற் சொல். (3)

சொல்லா ரினிய கவிமாலை போதச் சுடர்பரப்ப
நல்லாய் நினதடிக் கேற்றிப் பணிந்தேனின் னையனுக்குப்
பொல்லாத துன்பம் நெருங்காது நீக்கிப் புரந்தெனைக்கா
வல்லாமல் வேறு புரியாதே துர்க்கை மனோன்மணியே (4)

மனதேயுன் னாற்பட்ட வாதையெலாம் போதும்
இனியுன் வழிக்கே யிசையேன்—நனிசுகம்என்
இட்டப் படிநட்டீ யென்றாய்துர்க் கைபாதங்
கிட்டிப்பே ரானந்தங் கேள். (5)

கேளொன் னகந்தற் சுகானந்த போதங் கிளம்பநெடு
நாள்நின் னடித்தொண்டு செய்யவென் றேதினம் நாடினதா
வாள்கொண்ட நாரி மகிடனைச் செற்ற மணியே நினக் [ல்
காள்நா னெனைத்தள்ள லாகுமோ தாயேநீ யாதரியே. (6)

தரியலரைத் தைத்தியரைத் தன்கைச்சூ லத்தால்
எரிமுன் படுதுரும் பேபோல்—கரிந்து பொடி
நீறாக்கிச் செற்ற நிமலியெனை யேனம்மா
வேறாக்கி விட்டாய் விரி. (7)

உ

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

திரிசிரபுரம் S. P. G. காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

அமிர்தம் சுந்தரநாதபிள்ளையவர்கள் இயற்றிய

சாற்றுக்கவி.

பூமாது மணாளனின்பின் பேபிறந்தாள்
மகிடனையும் பொன்றச்செய்தாள்
மாமாது துர்க்கையம்மன் மலரடிக்காய்ப்
பதிகமொடு மாலை சொற்றான்
நாமாது வரத்தினிய கவிசொரியுங்
கொண்டனிகர் நாதன் செல்வச்
சீமாது கிருபை பெறுங்
கவிவடிவேல் சாமியெனுஞ் செல்வனம்மா.

அவையடக்கம்.

ஜெயராஜர் திவ்யதிருச் சமுககவி ராஜர்க்கு சிறுவன் ஓர் விண்ணப்பமே - செய்வன்பசுங் குதலைசொல் பிழையாய் வெறுத்திடாச் செயல் சீரியர்க் குண்டனோர் - நயமாதி பொலிவிலாதே யிருந்தாலுமென் நவைதள்ளி பொருள் காணவே - நல்லன்ன கொள்கை கொள்வார்கள் நெய்யரி யென்ன நன்மைவிட்டுக் கசடையே-வியனூதி நூல்வழிகள் முறையினறி யாதவர் விளம்புவர் அப்படிக்கு - வெகுசிறிய னன் கவிஞரடிகள் துணையென்னவே வேண்டிவேண்டிப் பணிந்து - வயமீறுந் தென்றமிழ் சிகாமணி யானபீர் முகம் மதுமலர்ப்பாதமே வணங்கிசில கவிமாலை துர்க்காம்பிகைக் கென்ன மகிதலத்திற் சொல்வனே.

சரஸ்வதி துதி.

வேணியரனிடக் குயிலாள் முன்பிறந்தோ னுந்திவந்தான்
விரிஞ்ச னவாற் - சேணியருந் தெரிவரிய மறை தந்தாள்
வெண்மரையிற் றிகழுந்தூய - வாணியர விந்தபதம் மனத்
தூன்றி களிபெருகி வரம்பில் ஞானம்-பேணியரவம் நடுங்க
மயிலேறுஞ் சரஸ்வதியைப் பேசுவோமே.

ஈஸ்வரர் துதி.

தங்கமலை யிடமுடையோன் வெள்விடையோன்
மழுப்படையோன் றனது மேனிப் - பங்கமலை யானபிரான்
பரன் கொன்றை சூடிசிவன் பரமனுதன்-சங்கமலைக்கங்கை
சடா தரனிந்தரன் வினைதீர்த்த தயாளன்றன்னி-தங்கமலை
யுறையலரை நிகரடியை முடியேற்றித் தாழ்கு வோமே.

உமாமயவள் துதி.

வெண்பா.

மலையீன்ற கன்னியரை வள்ளலிடத் தாயை
கலையீன்ற நாரணிமென் காலைத் - தலையூன்றி
நெஞ்சம் பணிந்து நிதம்பரவி யிம்மாயை
வஞ்சனைதீர்த்தே நாம் வாழ் வாம்.

முருகர் துதி.

கலி விருத்தம்.

முந்தி சூரர் முழுப்படை வென்றவன்
இந்திரன் மகள் வள்ளிக் கிசைந்தவன்
தந்திபின் பிறந்திட்டதோர் சண்முகக்
கந்த வேளைக் கருதிப் பணிகுவாம்.

விரிந்தலர்ந் திட்ட மறைவேத னந்த விரிஞ்சனையே
திரிந்தலை யாம லுதரத் தடக்குந் திறத்தரிபின்
பிறந்திந்த பூமி யனைத்தும் புரந்தநற் பெண்ணனங்காய்
வருந்திப் புலம்பு மடியேனை யாளா வருத்தமென்னே. (8)

என்செய்தாய் நெஞ்சே யிதுவரைநந் தாயடியை
உன்னாம லேனோவீ ணேயுழன்றாய்—அன்னைகிரு
பாகரிபா தப்புகழைப் பாடப் படிக்கபதஞ்
சேகரிபோ நற்றவரைச் சேர். (9)

சேர்ந்தலைந் தாய்சுத்த தீயர்க டம்மைத் தினந்தினமும்
ஓர்ந்திருந் தாயதி னாலென்ன கண்டா யுலுத்தநெஞ்சே
ஆய்ந்துபார் துர்க்கை யிருபாத மன்றி யளியளிக்க
வாய்ந்ததா ரில்லை யினியுனக் கேற்க மகிதலத்தே. (10)

தலத்திருந்துந் தாயடியைச் சாராம லேமும்
மலத்தலைந்தா யென்ன மனமே—வெலத்தடையேன்
ஆயர் குலத்துதித்த அன்னைதுர்க்கை நின்வினையை
மாயன்பின் னாற்பிறந்த மான். (11)

மானார் மயக்கு விழியா லலைந்து மயங்கி தினம் [சே
வீணாய்த் திரிந்தலைந் தாயினி வேண்டாமென் வெட்டிநெஞ்
யானா யுனக்குப்போ திக்கவா வேண்டும் அமலி துர்க்கை
மானாளிருக்கத் துயர்நமக் கில்லையிம் மண்டலத்லே. (12)

மண்டலத்தை யுண்டான் வரையெடுத்தான் முன்யுகத்தே
விண்டலமு மப்பாலு மேவளர்ந்தான்—விண்டுபின்னே
வந்த நங்கை துர்க்கை மலரடியைத் தெண்டனிட
சொந்தநமக் குண்டில்லை சூது. (13)

சூதாடி முன்னே யுலகெலாந் தோற்றுச் சுழல் நதியின்
மீதாடுஞ் செத்தை நிகராய்த் திரிந்தநல் வேற்ற ருமன்
சாதான மன்னற் கருள்செய்த மாயன் றனது தங்கை
பாதர விந்தம் பணிந்தேற்ற நிற்குப் பயமில்லையே. (14)

இல்லையோ பூர்வலெபி யேயிருந்தா லுன்புகழைச்
சொல்லவே யென்னெஞ்சஞ் சோருமோ—தொல்லையுல
கின்வாழ்க்கை யானந்தம் என்னேரம் என்றழியா
வின்வாழ்க்கை யைவிரும்ப வே. (15)

வேயீன்ற முத்தர் நுதலங்கிக் கண்ணர் விரிசடையர்க்
காயீன்ற கன்னற் சிலையானையீந்த கரியவன்றன்
சேயீன்ற பூமி யியாவுஞ் சிறந்தநற் றேவிதுர்க்கைத்
தாயீன்ற பிள்ளை நினைத்தேடி நெஞ்சந் தவிக்கின்றதே (16)

தேகம் பருத்துத் திமிரா யிருந்தென்ன
வாரும்சா காதிருக்க வாகுமோ—வேகமய
சொர்க்கச் சுகங்காணத் துன்பமடையா திருக்க
துர்க்கையம்ம னுண்டே துணை. (17)

துணையார் நினக்குச் சுடுகாடு மட்டேயுன் சுற்றமெல்லாம்
பணமாவ தேது சிறுகோ வணத்தோடு—பாடையின்மேல்
பிணமாகி நால்வர்புயமீ தமர்கையிற் பேதைநெஞ்சே
கணமா னுங் கண்ணி திருவடி தேடக் கதிதருமே. (18)

தருமிக்குப் பொற்கிழியைத் தானளித்தான் றன்பால்
வருமிக்கப் பங்குடைய மாதிக்—கருமிக்குப்
பாதந்தந் தாளும் பயமேன் மடநெஞ்சே
ஏதந் தவிர்நீ யினி. (19)

இனிமே லுனக்கியான் சொல்வதே தில்லையெ னேழைநெ
ஞ்சே, சனிபோனு மாதர் மயக்கத்தைத் தீரத் தனிச்சுடர்
முன்—பனிபோற், பவம்போஞ் சுவர்க்கங் கிடைக்குமிப்
பாரினிலே, நனிமீறி செல்வங் கொடுத்திடு வாள்துர்க்கை
நாயகியே. (20)

வெண்பாவும் கலித்துறையும் மாறி மாறி வருதல்காண்க

முற்றிற்று.

காப்பு வெண்பா.

காவிரியை யீந்த கணபதிநா ளைப்போற்றி
பாவிரியத் துர்க்கையம்மன் பாதத்தே - மேவி
பதிகம் புனைந்தேற்றிப் பாடவெண்ணி னோயற்
கதிகமுண்டே நல்லா சை.

ஸ்ரீ துர்க்கையம்மன் பதிகம்.

நூல்.

இரட்டை ஆசிரிய விருத்தம்.

பொன்னம்பலத்திலே நாட்டியஞ் செய்தவன் புங்கவன் கங்காதரன், புண்ணியன் பொருந்துவரை மேருசிகரமாப் போர்த்தநாட் பிரபஞ்சனன், தன்னரிய வலிதெரிய சிந்தினதி லொன்றெனுந் தக்கண கைலாசமிதிலே, சார்ந்தடியர் வினையெலாந் தீர்ந்து கதிசேரவே தண்ணருள் கொழிக்குமன்னாய், என்னையான் அறிகிலேன் உன்னையே நம்பினேன் இனிவேறு கதிகாண்கிலேன், எப்படியுன் னபிப்பிராயப் படியிசைந்தவன் இனியென்ன சொல்வனம்மா, சின்னவன் என்னையாள் பன்னக நன்னதி வளர்திரிசை யாதவர்புரியிலே, திக்கரவமும் பணிய மிக்கமயி லொக்குநடை செக்கர்பத துர்க்கையுமையே. (1)

ஆகாமி யஞ்சஞ்சிதம் பிராரத்துவமான மூன்றிற்கு முதலாய், ஆவது நம்மனமின்றி வேறொன்று மில்லையென் றான்றோர்கள் சொல்மொழியிலே, ஏகாமலே மங்கை மோகபோகங்கள் பெரிதென்றெண்ணுவர் சிறியர்கள், இவர்களுறவானதோர் தினையளவும் வேண்டிலேன் என் னம்மணி பெண்மணி, சாகாத மெய்போக சுகம்வேண்டினேன் அந்த சாயுட்ச்யந் தந்தாளுவாய், சகலஜீவர்க்குதவி செய்தருள் பராபரி தயாபரி சேயனென்றன், தேகாதி வாக்கு காயங்களிவை நின்னதே திரிசையாதவர்புரியிலே, திக்கரவமும் பணிய மிக்கமயி லொக்குநடை செக்கர்பத துர்க்கையுமையே (2)

வேதாந்த நாரணி வித்வபரிபூரணி விற்பனச் சிவகாமி நி
வெகுண்டந்த மகிடனைக் கொன்றருள் நிவாரணி வேதமோ
திய வாரணி, நாதாந்த பிர்ம்மவெளி ஜோதிமய காரணி
நாரிநீ யன்றியுளதோ, நவநீத கள்வன்பின்பே பிறந்தவளும்
நீ நாசமில்லாதவளும் நீ, போதாந்த முடிவும் நீயே காம
ரூபணி புண்யம் நிறைவான ஞானி, புலம்புமடியேனை யா
ளாததேனம்மணி பொற்சபையிலே நிர்த்தனி, தீ தோய்
ந்த மோட்சம் நீயாய் தந்து கிருபைசெய் திரிசையாதவர்
புரியிலே திக்கரவமும் பணிய மிக்கமயி லொக்குநடை
செக்கர்பத துர்க்கையுமையே. (3)

குலதெய்வமே யென்று கூவினேனென்னையேன் கூப்பி
டாதேயிருந்தாய், கொஞ்சமேனும் முனது நெஞ்சிரங்காத
தேன் குமரிதுர்க்கை பெண்மணி பலவான துன்பமே
யென்னை யணுகாமலாள் பாக்யவதியே தெரிதரும் பச்
சைப் பசுங்கொண்டலாயன் சகோதரி பராபரி ஞானரூபி,
தலைமீதிலே யயன் எழுத்து நங்கைவசம் தன்மனஞ்சாட்சி
யதனால், தடுக்கமுடியாத பேரின்ப சுகம்வேண்டினேன்
தந்தாளுவா யம்மணி, சிலகரிய கோகிலங் கொக்கிலுறும்
பல்வளத் திரிசை யாதவர் புரியிலே திக்கரவமும் பணிய
மிக்கமயி லொக்குநடை செக்கர்பத துர்க்கையுமையே.

யார்யாரிருந்தென்ன போயென்ன வன்னையே வாயுள்
முடிவானபோதில், ஆதரவு நின்பாதமன்றி வேறுண்டு
கொல் ஐயகோ வீணிலேநான் ஊர்ஊர்எலாந் திரிந்தோர்
பயனுங் காண்கிலேன் உன்பாத துணைகள் நம்பி, யுற
வென்னிலோ யெனது கர்மாந்த்ர பூர்வபல வூழ்வினைகள்
போராடுதே, காரான மேனியன் காகுத்தன் றங்கையே
கன்னிசயமகள் அமரியே, கருணைபுரிசிறியன்உன் திரு
வருளையான் பெறுங்கால மென்றோ வறிகிலேன், சீருரக
முன்போன பாதை நதியாய் வருந் திரிசை யாதவர்புரியிலே

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

மஞ்சுநிகர் குந்தளமின்னே யென்ற காவடிச்சிந்து

சந்தம்.

திரிசையாதவர் புரத்திலே ஜெகமகிழ புகழ்பரவுந்
தேவி துர்க்கை முன்யுகத்திலே வந்த
தீயதானவ ஞயமகிடனை மாயவேபுரி யாயன்சோதரி
சிங்கவாகனி தயாபரி உனதடிமை மனதில்தினம்
தங்குவாய் நீயே க்ருபாகரி. (1)

தரியலர் சம்ஹாரணி மாயன் கோவர்த்தனகிரி—தூக்கினவரி
தங்கையே வடிமை நின்சேயன்-உன்பா-தங்களே துணை
யிங்கெஞர்கிலே சங்கனைத்தவிர் துங்கமாமணி
தங்கமாமகுட நாரணி கிருபைபுரி வரியநற்ப
தங்களுக் காதார காரணி. (2)

காணவே காதல்கிளம்புதே மரைமலரை நிகரடியின்
காட்சியை நாடித் தளம்புதே-சுந்தர கன்னியேயினி
யுன்னையன்றியே யின்னல் தீரவே பண்ணுவோரிலை
கஞ்சமெல்லடிகள் தஞ்சமே யாதரியாயன் சோதரி சேயன்
வஞ்சனை தீர்த்தாள்செய் கொஞ்சமே. (3)

திங்கரும்புச்சொல் சிற்றிடைச்சி ஞானியே சக்ர
பாணியே உக்ர சிங்கமேறும் அன்னநடைச்சி திவ்ய
சேல்மீன் கண்ணியே யாளுவாய்வடி வேலுசாமினின்
கால்விரும்பியே செப்பிய கவிசிறக்கவே உலகிலுள்ள
புலவருள்ளஞ் சேர்ந்ததிற் பிழை பொறுக்கவே. (4)

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

செந்தின்மாநகர் என்ற காவடிச்சிந்து சந்தம்

திரிசிராமலை யாதவர்புரம் செங்குளம்

வெள்ளைகாளியம்மன் வணக்கம்.

திரிசிராமலை யம்பதியில் வளர்
செங்குள வெள்ளைமாகாளி-யிரு-பங்கயப்பததிரி சூலி
எந்தன்-சிந்தையானது வந்துமேதுதி
யெந்தநாளுமி ரந்து செய்திட
தீர்த்திடாவினை யாவையும் நீக்கிடும் செல்வப் பிரபல்யகபாலி
உள்ளன்-புள்ளவர்க்கரு ளனுகூலி. (1)

கரிசறுமன வம்பனுக்கே யருள்
காமதேனுவான சிலி யிந்த பூமண்டலப்பரிபாலி-வெகு
காதலோர்திரு பாதபங்கய மீதிலேமனங்
கோதிலா துற
காட்டவே பஞ்சபாதகமாயினுங் காதமோடச்செய்யும் நீலி
சத்ய-சாதனையருள் பொறை வேலி. (2)

கந்த நாறிடும் பங்கயவாசனன்
கைத்திறத்தாலாய பூமி நல்விச்-சித்ரத்தோடுறு மபிராமி
சிங்கக்-கங்கணக் கட-கங்களிப்பொடு
தங்கசிற்றர-வங்களச் சடைக்-காடெலாம் வர
நாடகம் செய்திடக் காலெடுத்தாடுங் கெம்பீரி
கண்கள் சேலேடொத்த நற் சிங்காரி. (3)

வெந்துமாய்ந்திடு மிந்ததிரேகத்தை வீண்செய்யக்கூடாத
வண்ணம் அம்மா நான்செய்யுந்துதி கொள்ளும் எண்ணம்
முத்தி-வீடடைந்திட நாடியுன்பதம் தேடியேதுதி
பாடிடும் வடி வேலுசாமிசொல் பிழை
பொறுத்தாண்டிட வேண்டுகின்றேன் இது திண்ணம்
யாளி பூண்டதேர் ஏறிவா சொர்ணம். (4)

..ரவமும் பணிய மிக்கமயி லொக்குநடை செக்கர்
..பத துர்க்கையுமையே. (5)

பஞ்சமா பாதகஞ் செய்தவர்களும் உனது பாத பங்கய முற்றிடில், பலவினைகளுங்கழிந் துலகதிநிலே பெரிய பாக்கியர்களாவரன்றே, தஞ்சமென்றுனைநம்பி வந்தசிறி யேனை நீ தள்ளுதல் ஏன் ஞாயமோ, தாய்மடி பிடித்திழுத் தாதரி யெனச் சொலுந்தன்மை பிள்ளைக்கில்லையோ கொஞ்சமேனுங் கருணை கூராததேனம்மா! குமரியுன்னெ ஞ்சிரும்போ, கொடியகற்பாறையோ வடியன்மேல் கோப மோ கூறுவாய் என்னம்மணி, செஞ்சந் தனக்களப மஞ்சு பொழி நீர்கமழ் திரிசையாதவர் புரியிலே, திக்கரவமும் பணிய மிக்கமயி லொக்குநடை செக்கர்பத துர்க்கை யுமையே. (6)

மங்கையர்களுடையிலே யனமொத்தநடையிலே மயிலை நிகர்சாயல் தனிலே, வாள் விழியிலே யினியவமுர்த மொ ழிதன்னிலே மதிமுக மினுக்கதனிலே, தங்கமலை யெய்த்த விருகொங்கைகள் குலுக்கிலே தவள முத்தூறலதிலே, தன்மனஞ் செலுத்தி வீணாக வழியாமலே தாவுசெய் தெனையாளுவாய், சிங்கவாகனி மகிடசம்ஹாரணி திவ்ய திக்கணங்குக்காசியே, ஜெயவிஜய சரச சல்லாப உல்லாச மிகு தீரியே யகோரிவீரி, செங்கஞ்சமென மாதரான னத் தரிபாவு, திரிசையாதவர் புரியிலே, திக்காரவமும் பணிய மிக்கமயி லொக்குநடை செக்கர்பத துர்க்கையுமையே.

அஞ்சாதே மகனே நீ யென்றெனக் கருள்புரிவ தந்த நாள் எந்தநாளோ, அதுவரையி லென்னுவி பூமியில் இரு க்குமோ அல்லதெப்போ பிரியுமோ, கொஞ்சநாள் மானி டர்கள் வாழ்வதற்குள்ளுனடி கூடுவது பெரிய கடமை கொண்டல் வண்ணற் கிளைய தங்கையே உன்னருங் குழந் தைக் கருள்புரியவே, பஞ்சாயம் ஏன் அம்மா! நான்என்ன

வேறேயா பாலன் மொழிகேட்கவிலையா, பாட்டுக்கிரம
பெருமுளரோ யதைப்பகரவேண்டும்அம்மணி, செஞ்சாம
கங்குபணை மீதெலாஞ் சிந்துநற் றிரிசை யாதவர்புரியிலே,
திக்காவமும் பணிய மிக்கமயி லொக்குநடை செக்கர்பத
துர்க்கையுமையே.

சடாதரி புராதனி சாமளை வராகிமா தங்கி நிர்த்தனி
யந்தரி, சமரி சக்கிரபாணி குமரி சண்டிகை கௌரி சய
மகுட சம்வர்த்தனி, தடாதகை நிராதாரநீலி காத்தியாயனி
சதுர்மறை யினடனரூபி, தனிவிசயைகன்னி பகவதி சுந்
தரி யரிதங்கை பாலைக்கிழத்தி, விடாதென்னையாதரி கடா
செற்றநாரணி விமலை யெண்டோட் பரத்தி, விரிதிரி சூலி
யரிவாகனியே நாரணி விந்தியதென் மந்தாகினி, திடாதார
மாங்கமுகு சோலைவள மார்தருந் திரிசையாதவர் புரியிலே
திக்காவமும் பணிய மிக்கமயி லொக்குநடை செக்கர்பத
துர்க்கையுமையே. (9)

தங்கநிற மேனியன் மரைமலரினந்தணன் தலையெழுத்
திட்டபடியே, தரணியில் நடப்பதது யார் தடுத்திடவலார்
சமயத்திலுற்ற படியே, பொங்குமிகு கிருபையோடுதவி
செய்திட்டவர் புண்யர்மேல் விசுவாசமே, பொன்றுது
சித்தமே நின்றுவிட வல்லதேல் புரந்தரன்போல் போகமே
தங்கலாம் என்றதொரு வெண்ணமெமற்குண்டம்மா சத்தி
ய மனப்பூரணம், சாட்சியாய் சொன்னேனீதென தன்பனு
ன் *பெருமாள் தனக்கே யருளுவாய், சிங்காரமானவன
மேர்ங்கபுரி பண்ணளியித் திரிசை யாதவர் புரியிலே திக்க
ரவமும் பணிய மிக்கமயி லொக்குநடை செக்கர்பத
துர்க்கையுமையே. (10)

முற்றிற்று.

---

* திரிசை யாதவர்புரம் (எடத்தெரு) சோடாஷாப்
இ. பெருமாள் நாயுடு.

1451